செ.வெ.எண்: 76 நாள்: 26.11.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.229.46 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கட்டிட கட்டுமானப்பணிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

புதுக்கோட்டை வட்டம், முள்ளூர் கிராமத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் புதுக்கோட்டை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கட்டிட கட்டுமானப்பணிகளை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச்செயலாளர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள், தேசிய நலவாழ்வு மைய திட்ட இயக்குநர் டாக்டர்.தாரேஸ்அகமது,இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் ஆகியோர் முன்னிலையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (26.11.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கட்டுமானப்பணிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய மக்களுக்கு உலக தரத்திலான உயர்தர மருத்துவ வசதிகள் தங்கு தடையின்றி கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தை கொண்டு செயல்பட்டு வருகிறார்கள். இதன்படி மருத்துவக்கல்லூரி இல்லாத அனைத்து மாவட்டங்களிலும் புதிய அரசு மருத்துவக்கல்லூரிகளை படிப்படியாக தொடங்குவது தான் தமிழகஅரசின் கொள்கையாகும். தமிழ்நாட்டிலுள்ள 32 மாவட்டங்களில் 17 மாவட்டத்தில் 21 அரசு மருத்துவக்கல்லூரிகள் ஏற்கனவே இயங்கி வருகின்றன. இந்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 25.08.2011 அன்று சட்டமன்ற பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பினை தொடர்ந்து புதுக்கோட்டை மாவட்டத்தில் 150 மருத்துவ மாணவர் சேர்க்கையுடன் புதிய மருத்துவக்கல்லூரி துவங்க தமிழகஅரசு 02.11.2015 அன்று ஆணை வெளியிட்டது. மேலும் இம்மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் கட்டிடப்பணிகளுக்காக ரூ.229.46 கோடி வழங்க தமிழகஅரசு நிதி ஒதுக்கீடு செய்தது. அதனடிப்படையில் முள்ளூரில் 127 ஏக்கர் நிலம் இம்மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு ஒப்படைக்கப்பட்டது. இதில் தற்பொழுது 20 ஹெக்டேர் பரப்பளவில் ரூ.229.46 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கட்டிட கட்டுமானப்பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த அரசு மருத்து கல்லூரி மருத்துவமனையில் 7 கல்லூரி கட்டிடங்கள் ரூ.59.16 கோடி மதிப்பீட்டிலும், 11 மருத்துவமனை கட்டிடங்கள் ரூ.108.99 கோடி மதிப்பீட்டிலும், 13 குடியிருப்பு கட்டிடங்கள் ரூ.61.31 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் 31 கட்டிடங்கள் ரூ.229.46 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. இதில் கல்லூரிக்கென கட்டப்படும் கட்டிடங்களில் கல்லூரி கட்டிடம், 2 விரிவுரையாளர் அரங்கம், நூலக கட்டிடம், கலையரங்க கட்டிடம், ஆய்வுகூடம், பட்டறை கட்டிடம் என கல்லூரி கட்டிடங்கள் மொத்தம் 20559.18 ச.மீ பரப்பளவில் கட்டப்பட்டு வருகிறது. மருத்துவமனைக்கென கட்டப்படும் கட்டிடங்களில் 700 படுக்கைகள் கொண்ட கட்டிடம், வெளிநோயாளிகள் பிரிவு, நிர்வாக பிரிவு, TSSD, பிணவறை, கட்டண கழிப்பிடம், நவீன சமயற்கூடம், சிற்றுண்டி கூடம், இருசக்கர வாகனம் நிறுத்தும் இடம், அவசர ஊர்தி நிலையம், வங்கி மற்றும் தபால் நிலையம் ஆகிய பிரிவுகளை கொண்டு மொத்தம் 41195.60 ச.மீ கட்டப்பட்டு வருகிறது. குடியிருப்புக்கென கட்டப்படும் கட்டிடங்களில் ஆண், பெண் இருபாலருக்கென தனி தனி விடுதி கட்டிடம், முதல்வர் குடியிருப்பு, இருக்கை மருத்துவ அலுவலர் குடியிருப்பு, A,C,D பிரிவு குடியிருப்புகள், உடற்பயிற்சி கூடம், CRRI ஆண்,பெண் குடியிருப்பு, செவிலியர் ஆண்,பெண் குடியிருப்பு என மொத்தம் குடியிருப்பு கட்டிடங்கள் 22644.33 ச.மீ பரப்பளவில் கட்டப்பட்டு வருகிறது. இதன் மூலம் புதிய அரசு மருத்துவ கல்லூரியின் மொத்த கட்டிடங்களின் பரப்பளவு 84399.11 ச.மீ ஆகும்.

..2..

மேலும் இம்மருத்துவக்கல்லூரி கட்டிட கட்டுமானப்பணிகள் முடியும் தருவாயில் உள்ள இப்புதிய மருத்துவக் கல்லூரிக்கு கூடுதலாக தேவைப்படும் 161 பணியிடங்கள் ஏற்கனவே உருவாக்கப்பட்டு, தேவைப்படும் மருத்துவ உபகரணங்களை தருவிக்கும் பணிகளும் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இந்த மருத்துவக் கல்லூரி வரும் கல்வியாண்டில் (2017-2018) இருந்து மருத்துவ மாணவர் சேர்க்கை நடைபெற ஏதுவாக இந்திய மருத்துவ கவுன்சிலிடமிருந்து அனுமதி கடிதம் (Letter of Permission) பெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் விரைவாக மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

பின்னர் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச்செயலாளர் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், தேசிய நலவாழ்வு மைய திட்ட இயக்குநர் அவர்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை அரசினர் இராணியார் மகப்பேறு மருத்துவமனை வளாகத்தில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் தாய், சேய் நல கட்டிட கட்டுமானப்பணிகள் மற்றும் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்தும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வின் போது இயக்குநர்கள் மரு.கே.செங்குட்டுவன் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்), மரு.நாராயணபாபு (மருத்துவக்கல்வி இயக்ககம்), மரு.க.குழந்தைசாமி (பொது சுகாதாரம்), மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.பரிமளாதேவி, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., இணை இயக்குநர் மரு.சம்ஷாத்பேகம் (பொது சுகாதாரம்), சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.இ.ஏ.ரெத்தினசபாபதி (அறந்தாங்கி), திரு.பி.ஆறுமுகம் (கந்தர்வக்கோட்டை), முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு.வி.சி.ராமையா, அர்பன் கூட்டுறவு பண்டகசாலை சங்கத்தலைவர் திரு.இரா.ராஜசேகரன், மருத்துவ அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**